அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 09/95

எனது இல. I/543சு/02டீ/02/94(II)
அரசாங்க நிருவாக உள்நாட்டு அலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07,
1995, மார்ச் 14ஆந் திகதி.

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

**இடைக்காலப் படி – அ.நி. சுற்றறிக்கைகள் இல. 33/94உம் 06/95உம்**

மேற்குறித்த விடயம்பற்றி என்னால் வெளியிடப்பட்ட 1994.08.12ஆந் திகதிய 33/94ஆம் இலக்க, 1995.02.23ஆந் திகதிய 06/95ஆம் இலக்கச் சுற்றறிக்கைகளுக்கு உங்கள் அவதானம் கோரப்படுகிறது.

02. அனைத்து அரசாங்க சேவைகள் சம்பந்தமாகவும் இப்போதைய சம்பள அளவுத்திட்டங்களையும், நிலவும் சம்பள முரண்பாடுகளையும் ஆய்வதற்கான எல்லா அதிகாரங்களையும் கொண்ட ஒரு சனாதிபதி ஆணைக்குழு மிக விரைவில் அதி மேன்மைக்குரிய சனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட உள்ளது.

03. மேற்குறித்த ஆணைக்குழுவின் அறிக்கை, விதப்புரைகளின் அடிப்படையில் அரசாங்க சேவையிலுள்ள எல்லாச் சம்பள முரண்பாடுகளையும் அகற்றுவதற்கு ஒரு முழுமையான திட்டத்தை வகுப்பதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

04. அதனால், 1995 பெப்ரவரி மாதத்தின் பின்னர் செயற்படுமாறு மேற்குறித்த 1994.08.12ஆந் திகதிய 33/94ஆம் இலக்க, 1995.02.23ஆந் திகதிய 06/95ஆம் இலக்கச் சுற்றறிக்கைகளில் குறிப்பிட்டுள்ள கொடுப்பனவை நிறுத்துமாறு இத்தால் அறிவிக்கப்படுகிறது. இக் காலத்துக்கு முற்பட்ட காலத்துக்குக் கொடுப்பனவுகள் கொடுபடலாம்.

ஒப்பம்: ஆர். எஸ் ஜயரத்ன
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள், பெருந்தோட்டக்
கைத்தொழில், பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு.